ان الله حين خلقني جعلني خير خلقه ثم حين خلق القبائل
جعلني من خيرهم قبيلة وحين خلق الانفس جعلني من خير
انفسهم ثم حين خلق البيوت جعلني من خير بيوتهم فانا خيرهم
بيتا وخيرهم نفسا

அல்லாஹு தஆலா படைப்பினங்களை சிருஷ்டித்த போது அதில் என்னையே சிறந்த சிருஷ்டியாகவும் (அந்த படைப்பில்) வம்சாவழியினரை அமைக்கையில் என்னையே சிறந்தவராகவும், அந்த வம்சாவழியில் ஆத்மாக்களை உருவாக்கையில் என்னையே சிறந்த ஆத்மாவாகவும், அந்த ஆத்மாக்களில் குடும்பத்தினரை ஏற்படுத்தும்போது அதில் என்னையே சிறந்த குடும்பமாகவும் ஆக்கினான் என்பதாக வள்ளல் நபி ﷺ அவர்கள் அருள்மொழி பகர்ந்தார்கள்.

9. ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்த ஹதீதை இமாம் தப்ரானீ ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் பைஹகீ ரஹ்மத்துல் லாஹி அலைஹி, ஹாஃபிழ் அபூநயீம் ஆகியோர் குறிப்பிடுகிறார்கள்.

قال رسول الله صلى الله عليه وسلم ان الله قسم الخلق
قسمين فجعلني في خيرهم قسما ثم جعل القسمين اثلاثا فجعلني
في خيرها ثلثا ثم جعل الاثلاث قبائل فجعلني في خيرها قبيلة
ثم جعل القبائل بيوتا فجعلني في خيرها بيتا

அல்லாஹ் படைப்பினங்களை இருவகையினராகப் பிரித்து அதில் சிறந்த பிரிவிலே என்னை ஆக்கினான். பின்பு அதனை மூன்றாகப் பிரித்து அதில் சிறந்ததிலே

என்னை ஆக்கினான். பின்பு அதனையும் மூன்று கோத்திர மாகப் பிரித்து அதில் என்னை சிறந்த கோத்திரத்தில் தேர்ந்தெடுத்தான். பின்னர் அதனை குடும்பங்களாக மாற்றி என்னை அவற்றில் சிறந்த குடும்பத்திலே ஆக்கி னான் என நாயகம் ﷺ அவர்கள் கூறினார்கள்.

*10.* அபூ அலி இப்னு ஷாதான் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மூலமாக கிடைக்கப்பெற்ற ஒரு ஹதீதை 'முஸ்னத் பஸ்ஸாரிலும்' அல்லாமா முஹிப்புத் திப்ரி அவர்கள் 'தகாயிருல் உக்பா' விலும் குறிப்பிட்டுள் ளார்கள். இதனை ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல் லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்.

دخل ناس من قريش على صفية بنت عبد المطلب
فجعلوا يتفاخرون ويذكرون الجاهلية فقالت صفية منا رسول
الله صلى الله عليه وسلم فقالوا تنبت النخلة او الشجرة
في الارض اللبا فذكرت ذالك صفية لرسول الله صلى الله عليه
وسلم فغضب وامر بلالا فنادى في الناس فقام على المنبر فقال
ايها الناس من انا قالوا انت رسول الله قال انسبوني قالوا محمد
ابن عبد الله بن عبد المطلب قال فما بال اقوام ينزلون اصلي فوالله
اني لافضلهم اصلا وخيرهم موضعا

ஒருநாள் குறைஷிகள் எனது சகோதரி ஸஃபிய்யா பின்த் அப்தில் முத்தலிப் ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் சபைக்கு சமூகமளித்தார்கள். அங்கு தாங்கள் வாழ்ந்த மௌட்டீக காலத்தை பெருமிதப் படுத்தி பேசியவண்ணம் இருந்தார்கள். அதற்கு

ஸஃபிய்யா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் எங்களிலிருந்தே அல்லாஹ் தனது தூதரை வெளிப்படுத்தியுள்ளான் என்றார்கள். இதற்கு குறைஷிகள், நீங்கள் மரத்தை நடுபவர்கள். மரமோ குப்பை மேட்டில் (கூட) முளைக்கிறதே என்று மறுமொழி கூறினர். அதனை ஸஃபிய்யா நாயகி ரலியல்லாஹு அன்ஹா நாயகம் ﷺ அவர்களிடம் கூற அவர்களை சினம் கொண்டவர்களாக ஹழ்ரத் பிலால் ரலியல்லாஹு அன்ஹு அவர்களையழைத்து மக்களை ஒன்று திரட்டுமாறு கட்டளையிட்டார்கள்.

மக்கள் ஒன்று கூடியதும் பெருமானார் ﷺ அவர்கள் மிம்பரில் ஏறியவர்களாக நான் யார் தெரியுமா? எனக் கேட்க, நீங்கள் அல்லாஹ்வின் ரசூல் என்றனர் மக்கள். என் வம்சாவழியைக் கூறுங்கள் என்றதும், அப்துல் முத்தலிபின் மைந்தர் அப்துல்லாஹ்வின் புதல்வர் என்றனர். என்னைத் தரம் குறைத்து பேசுவோர் நிலை என்னவாகும் தெரியுமா? எனக் கேட்டபின், நான் வம்சத்தாலும், அந்தஸ்த்தாலும் இவர்களை விட உயர்ந்தவன் என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறினார்கள் காருண்ய நபி ﷺ அவர்கள்.

***11.*** இமாம் ஹாகிம் அவர்கள் ஹழ்ரத் ரபீஆ பின் ஹாரிஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவித்த நபிமொழியைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

بلغ النبي صلّى الله عليه وسلّم انّ قوما نالوا منه فقالوا انما
مثل محمد كمثل نخلة تنبت فى الناس فغضب رسول الله
صلّى الله عليه وسلم وقال ان الله حين خلقني جعلني خير خلقه
ثم حين خلق القبائل جعلني من خيرهم قبيلة وحين خلق الانفس

جعلني من خير انفسهم ثم حين خلق البيوت جعلني من خير بيوتهم
فانا خيرهم بيتا وخيرهم نفسا

நபியுல்லாஹ் ﷺ அவர்கள் மக்களிடையே உருவாகும் பேரீத்தமரம் போன்றவர் என்று சிலர் தரம் தாழ்ந்து பேசுவதைக் கேட்டதும் கோபம் கொண்டவர்களாக அல்லாஹ் படைப்பினங்களைப் படைத்து அதனை இரண்டாகப் பிரித்து என்னை சிறந்த பிரிவில் ஆக்கினான். பின்பு அப்பிரிவினரை கபீலாக்களாகப் பிரித்து என்னை சிறந்த கபீலாவில் ஆக்கினான். பின்னர் அந்த கபீலாக்களை குடும்பங்களாகப் பிரித்து என்னை கௌரவமும், கண்ணியமும் மிக்க குடும்பத்திலே ஆக்கினான். நான் குடும்பங்களிலும், கூட்டங்களிலும் உங்களைவிட சிறந்தவன் என்றார்கள் கருணைக்கடல் ﷺ அவர்கள்.

## கேள்வியும் – பதிலும்

பத்ரத்தின் காலத்தில் மரணமுற்றோர் வேதனை கொடுக்கப்படுவதாக ஸஹீஹான ஹதீது அறிவிப்பதாக அல் ஹூஜூன் போன்றோர் குறிப்பிடுகிறார்களே என ஒரு கேள்வியை எழுப்பினால் அதற்கு கீழ்காணும் விதத்தில் பதில் அளிக்கலாம்.

வேதனை அவர்களுக்கு அளிக்கப்பட்டாலும் அது குறைவாகவே அளிக்கப்படுகிறது. அதற்கான காரணத்தை அல்லாஹ்வே நன்கறிவான்.

ஹதீதுகளில் வேதனை குறைக்கப்படுவதாக கூறப்படுவது, எவன் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறி ஷரீஅத்தின் சட்ட திட்டங்களையும் மாற்றி, யாரும் அதனை பொருட்படுத்தாத நிலையில் வழிகேட்டில் செல்கிறானோ அவனைத்தான்.

இதன் அடிப்படையில் ஃபத்ரத்துடையோர் மூன்று விதமாக வகுக்கப்படுகின்றனர்.

**முதல் வகையினர் :**

இவர்கள் தான் அறிவுக் கண்களைக் கொண்டு வஹ்தானிய்யத்தை அறிந்து தெரிந்து கொள்வர். பின்பு மாற்றப்பட்ட மார்க்க விஷயம் எதிலும் ஈடுபாடில்லாது இருப்பர். உதாரணமாக, ஜனுப். கைஸ் பின் சாயிதா, ஹழ்ரத் ஸைத் இப்னு ஆமிர் இப்னு நுஃபைல் போன்றோர். இன்னும் சிலர் ரசூல்மார்களால் நிலைநாட்டப்பட்ட மார்க்கத்தில் ஈடுபாடுள்ளோரா யிருப்பர். உதாரணமாக ஜனுப் தபஃ ரலியல்லாஹு அன்ஹு மற்றும் அவர் கூட்டத்தினரைப் போன்று.

**இரண்டாம் வகையினர் :**

இவர்கள் தங்களுக்கு மத்தியில் வழங்கப்பட்ட ஷரீஅத்தில் மாற்றங்களையும், பேதங்களையும் உண்டு பண்ணி தௌஹீதில் நிலை நிற்பதற்கு பதில் இணைவைப் போராயிடுவர். தனக்கென்று ஒன்றை வகைப்படுத்தி தான் விரும்பியதை ஹலால் என்றும் ஹராம் என்றும் கூறிடுவர். இவ்வகையைச் சார்ந்தோரே (அக்காலத்தில்) அதிகம் காணப்பட்டனர். உதாரணமாக அம்ருப்னு லுஹை இவன் தான் அரபுகளிடையே சிலை வணக் கத்தை அறிமுகப்படுத்தியவன்.

அத்தோடு தான் விரும்பியபடி ஒரு மதத்தை தோற்றுவித்து புஹைரா, சாயிபா, ஹாமா என்றெல்லாம் மிருகங்களுக்குப் பெயரிட்டு அவைகளை அறுக்கக் கூடாது என்னும் சட்டம் வகுத்தான்.

இவனன்றி அரபுகளில் இன்னும் சிலர் அந்த மதத்தில் அம்ருப்னு லுஹை கூறுத சில செயல்களை அதிகப்படுத்தி ஜின்களையும், மலக்குகளையும் வணங்க வும், அவர்களுக்காக குழந்தைகளைப் பலியிடவும் துணிந்தனர். அத்துடன் தாங்கள் வணங்கும் சிலை களுக்கு இல்லம் அமைத்து, அவ்வில்லங்களுக்கு

திரையிட்டு அவற்றைப் பராமரிக்க பணியாட்களையும் நியமித்தனர். அல்லாஹ்வின் இல்லமான கஃபாவுக்கு நிகராக தங்களின் சிலைகளான லாத், மனாத், உஸ்ஸா சிலைகளுக்கு சுயமரியாதைகளையும் செய்தனர்.

## மூன்றாம் வகையினர் :

இவர்கள் அல்லாஹ்விற்கு எப்பொருளைக் கொண்டும் இணை வைக்காதவர்கள். அதேசமயம் அவனை ஏகத்துவப்படுத்தாமலும் எந்த நபியின் ஷரீஅத்தில் நுழையாதும் தனக்கென எதனையும் ஆரம்பிக்காதும் எந்த மார்க்கச் செயலையும் தேர்ந்தெடுக்காதும் வாழ்நாள் முழுவதும் மார்க்கம் என்றால் என்ன? எனத் தெரியாது மௌட்டீகத்திலே வாழ்ந்து மறைந்தவர்கள்.

மேற்கூறிய மூன்று வகையினரில் இரண்டாம் வகையினர் முற்றாக குஃப்ரியத்தில் வாழ்ந்ததற்காக மன்னிப்பின்றி வேதனை வழங்கப்படுவார்கள். மூன்றாம் வகையினரே உண்மையில் ஃபத்ரத்துடைய காலத்தில் வாழ்ந்தவர்கள். இவர்கள் தான் மேற்கூறிய திடமான நபிமொழிகளின் ஆதாரங்களைக் கொண்டு வேதனை செய்யப்படாதோர், முதல்வகைப் பிரிவினரோ நபிகள் ﷺ அவர்கள் பெயர் கூறிய கிஸ், ஸாயிதா போன்றோர். இவர்கள் தனிச் சமூகமாகவே எழுப்பப்படுவர்.

இவர்களில் யார் யார் எந்த மார்க்கத்தில் நுழைந்தார்களோ அதற்கேற்ப அவருக்கு வழங்கப்படும் தீர்ப்பு அமையும். இவையாயும் இமாம் அபூ அப்தில்லாஹ் முஹம்மதிப்னு கலபுல் உபை அவர்களின் கூற்றாகும்.

## நபிமார்களின் பெற்றோர் இறை மறுப்பாளர்களல்ல

திருநபி ﷺ அவர்கள் பெற்றோரைப் பற்றிய இரண்டாவது மார்க்க தீர்ப்பு யாதெனில், பரிசுத்தமான

இவ்விருவரில் நின்றும் ஷிர்க்கான நிகழ்வுகள் நிகழவே யில்லை. மாறாக இவ்விருவர்களினதும் குடும்ப வம்சா வழியினர் நிலையாகவும் அரபியர்களில் ஸைத் இப்னு அமீர் பின் நுபைல், வரகத் இப்னு நௌபல் போன்றோர் இருந்த நித்திய சத்தியத்திலேயே இருந்தார்கள்.

இம்முடிவில்தான் அதிகமான அறிஞர்கள் இருக்கிறார்கள். இமாம் ஃபக்ருத்தீன் ராஸி அவர்களும் அவர்களில் ஒருவராவார்கள்.

இவர்கள் 'அஸ்ராருத் தன்ஸீல்' என்ற தனது நூலில் "இன்ன ஆஸர லம்யகுன் வாலிது இப்ராஹீம் பல் காண அம்முஹூ" நிச்சயமாக ஆஸர் என்பவர் நபி இப்ராஹீமின் சிறிய தந்தை (சாச்சா) அன்றி தந்தையல்ல என்ற கூற்றுக்கு பின்வருமாறு ஆதாரம் காட்டுகின்றார்கள்.

இவர்கள் காட்டும் ஆதாரத்திலிருந்து நபிமார்களின் பெற்றோர் காஃபிராக இருக்க முடியாது என்பதும் தெளிவாகிறது.

الذي يراك حين تقوم وتقلبك في الساجدين (الشعراء)

(அல்லாஹ்) நீங்கள் (தனித்து வணங்குவதற்காக) நிற்கும் போதும் இன்னும் ஸஜ்தா செய்தோருடன் நீங்கள் இயங்கும் போதும் உங்களைப் பார்க்கின்றான்.

இமாம் அவர்கள் இவ்விறை வசனத்திற்கு விளக்க மளிக்கையில் "அன்னஹூ கான யன்குலு நூருஹூ மின் சாஜிதீன இலா சாஜிதீன்"

அதாவது நபிகளார் ﷺ அவர்களின் பரிசுத்த நூர் (ஒளி) சஜ்தா செய்வோர்கள் மத்தியிலே ஒருவரிட மிருந்து இன்னுமொருவரலவில் மாற்றப்பட்ட வண்ண மாக இருந்தது எனக் கூறுகிறார்கள்.

இந்த கூற்றின் பிரகாரம் நபிகளார் ﷺ அவர்களின் பெற்ளுேர் மட்டுமின்றி பாட்டனுர், முப் பாட்டனுர் என அவர்களின் முன்ஞேர் சகலரும் சஜ்தா செய்யும் முஸ்லிம்களாகவே இருந்தனர் என்பது தெளிவாகிறது.

மேலும் இந்த முடிவின் பிரகாரம் நபி இப்ராஹீம் அலேஹிஸ்ஸலாமவர்களின் தந்தையும் காபிரல்ல. காஃபிராயிருந்தவர் அவரது சிறிய தந்தை ஆஸர் தான். அந்த ஆஸரைத்தான் நபி இப்ராஹீம் அலேஹிஸ்ஸலா மவர்களின் தந்தை என்று அழைத்து வந்ததால் அல்லாஹ்வும் திருக்குர்ஆனில், அவர்களின் தந்தை என்று குறிப்பிட்டுள்ளான் என்பதும் தெளிவாகிறது.

இப்பிரிவில் இதுபோன்ற இன்னும் பல ஆதாரங் களே விரிவாக நீங்கள் காண முடியும். இவ்விஷயம் சம்பந்தமாக தரப்படுகிற சகல அறிவிப்புகளேயும், (மேற் சொன்ன) ஆயத்தின் மீது சுமத்தி விளக்கமளிப்பது கடமையாகும். மேற்கூறிய கூற்று சரி காணப்படும் போது நபி இப்ராஹீம் அலேஹிஸ்ஸலாமவர்களின் தந்தை சிலே வணக்கம் புரியவில்லே என்பது ஊர்ஜித மாகிறது.

இதனேத் தொடர்ந்து இமாம் ஃபக்ருத்தீன் ராஸி ரஹ்மத்துல்லாஹி அலேஹி அவர்கள் இவ்விஷயத்தை இன்னும் தெளிவுபடுத்துவதற்காக பூமான் நபி ﷺ அவர்களின் திருவாய் மொழியான

لم ازل انقل من اصلاب الطاهرين الى ارحام الطاهرات

என்பதை எடுத்துக் கூறுகிருர்கள். அதாவது நான் பரிசுத்த முதுகெலும்புகளிலிருந்து பரிசுத்த கற்பறை களுக்கு தொடர்ந்து மாறி மாறி வந்துக் கொண்டிருந்தேன்.

இந்நபிமொழி வள்ளல் நபி صلى الله عليه وسلم அவர்களின் பெற்றோர் மற்றும் வம்ச வழித் தொடர் மூதாதையர் களில் யாரும் ஷிர்கில், குஃப்ரிய்யத்தில் இருந்திக்க இடம்பாடில்லை என்பதை அறிவிக்கிறது.

வல்ல அல்லாஹ்வும் தனது வான்மறை குர்ஆனில் நிச்சயமாக முஷ்ரிக்கீன்கள் அசுத்தமானவர்கள் எனக் கூறுகிறான். அசுத்தமிக்க முஷ்ரிக்கீன்களின் வழியாக தனது பரிசுத்த நபியை தோற்றுவிப்பானா?

انّما يريدالله ليذهب عنكم الرّجس اهل البيت ويطهركم تطهيرا (احزاب)

நபிகளின் குடும்பத்தார்களே, அல்லாஹ் விரும்புவ தெல்லாம் உங்களைத் தொட்டும் அசுத்தத்தை நீக்கி உங்களைப் பரிசுத்தப்படுத்தி வைப்பதைத்தான் என்று அல்லாஹ் திருமறையில் நபிகளின் மனைவிமார்களையே பரிசுத்தப்படுத்தி வைத்திருக்கிறான். நபியின் வாழ்வில் பங்கு பெறுவோரை அல்லாஹ் பரிசுத்தப்படுத்தி வைத் திருக்கும் போது அந்த நபியின் வம்சவழியை அவர் களின் நூரை சுமந்து நின்றோரையும் தாங்கி நின்றோரை யும் அல்லாஹ் எப்படி அசுத்தப்படுத்தி வைப்பான்.

ஆக அறிவுடையோருக்கும் சரியானதை ஏற்க வேண்டும் என்று எண்ணுவோருக்கும் இந்த ஆயத்தின் விளக்கம் போதுமானதாகவே இருக்கும்.

இமாம் ராஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் சுட்டிக்காட்டிய பிரகாரம் எவ்விதத்திலும் மாண்புநபி அவர்களின் பெற்றோர் மற்றும் மூதாதையர்களில் யாரும் இணை வைப்போராக இருந்திருக்க முடியாது.

இமாம் ராஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள்

சுன்னத் வல் ஜமாஅத்தின் இமாம்களில் ஒருவராகவும், வழிகேடர்களான பித்அத்காரர்களுக்கு மறுப்பு தெரிவிக்கும் தூணாகவும் அவரது கால அஷாயிரிய்யா மத்ஹபுக்கு உதவி ஒத்தாசை புரிபவராகவும் திகழ்ந்தார்கள். மார்க்க செயல்பாட்டை உயிர்ப்பித்து இஸ்லாமியத்தை செழிப்புறச் செய்ய 6-ம் நூற்றாண்டில் தோன்றி திகழ்ந்தார்கள்.

## எல்லோரையும் விட சிறந்தவர்கள் உயர்ந்தவர்கள்

இமாம் ராஸி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் எந்த தீர்ப்பை தேர்ந்தெடுத்தார்களோ அதற்கு தகுந்த விதத்தில் நானும் சில விஷயங்களை முன் வைக்கிறேன். அவற்றில் முதல் விடயம் 2 செய்திகளால் பிணைக்கப் பட்டதாகும்.

## முதலாவது :

சந்தேகத்திற்கிடமின்றி ஸஹீஹான நபிமொழிகள் யாவும் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் முதல் ஹழ்ரத் அப்துல்லாஹ் ரலியல்லாஹு அன்ஹு வரையிலான எம் பெருமானார் ﷺ அவர்களின் சகல வம்சா வழியினரும் அவரவர் காலத்தில் எல்லோரை விடவும் சிறந்தவர்களாகவும் கண்ணியமிக்கவர்களாகவும் வாழ்ந்திருக்கின்றனர்.

## இரண்டாவது :

நபிமொழிகளும், வரலாறுகளும் நமக்கு தெளிவு படுத்தும் ஒரு விஷயம், நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்திலிருந்து நேசநபி ﷺ அவர்கள் வரையிலும் அதன் பின்னும் இறுதி நாள் வரையிலும் இந்த பூமியில் தவ்ஹீதை ஏற்று அவனை வாழ்த்துவோரும் வணங்குவோரும் இல்லாதிருந்ததே கிடையாது. அவர்கள் பொருட்டால் தான் இப்பூவுலகம் பாதுகாக்

கப்படுகிறது. இவர்கள் இல்லையெனில் பூமியுள் உள்ள யாவும் அழிந்து விடும்.

மேற்கூறிய இவ்விரண்டு விஷயங்களையும் நாம் ஒன்றிணைத்து பார்த்தால் நாம் கூறி வரும் விஷயம் உண்மையிலும் உண்மை என்பது புலனாகி விடும். அது, ரசூலுல்லாஹ் ﷺ அவர்களின் பெற்றோரில் யாரும் முஷ்ரிக்காக இருக்கவில்லை என்பதும், அப்பெற்றோர் அவரவர் காலத்தில் சிறந்தவர்களாகவும், இறைபக்திமிக்கவர்களாகவும் வாழ்ந்தனர் என்பதும் அவர்கள் ஃபத்ரத்தில் இருந்தவர்கள் என்பதும் தான்.

ஹழ்ரத் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாமவர்கள் என்னிடம் சமூகமளித்து, நான் பூமியில் கிழக்கிலிருந்து மேற்குவரை புரட்டிப் பார்த்தேன். அதில் உங்களை விடச்சிறந்த ஒருவரையும் காணவில்லை. மேலும் பனூ ஹாஷிமை விடச் சிறந்த எந்த தகப்பனின் பிள்ளைகளையும் காணவில்லை என்று கூறினார்கள் திங்கள் நபி ﷺ அவர்கள்.

ஹாஃபிழ் இப்னு ஹஜர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் 'அமாலியா' என்ற கிரந்தத்தில் இம்மேற்கூறப்பட்ட ஸஹீஹான தெளிவான ஆதாரங்கள் மூலமாக சிறப்பு, தேர்வு, உயர்வு என்பன அல்லாஹ்வால் வழங்கப்பட்டது என்பதும், இவ்விதம் அவனால் உயர்வாக்கப்பட்டோர் ஷிர்க்கில் என்றும் இருந்திருக்க சாத்தியமே இல்லை என்பதும் புலனாகின்றது எனக் கூறுகின்றார்கள்.

# இரண்டாம் விடயத்திற்கான ஆதாரங்கள்

அல்லாமா அப்துர் ரஸ்ஸாக் அவர்கள் 'முஸன்னஃப் அப்திர்ரஸ்ஸாக்' என்ற தமது நூலில் ஹழ்ரத் முஃமர், ஹழ்ரத் இப்னு ஜரீர், ஹழ்ரத் முஸய்யப் ஆகியோர் அறிவித்துள்ளதாக குறிப்பிடும் ஹதீதாவது.

قال علي بن ابي طالب لم يزل على وجه الدهر في الارض سبعة مسلمون فصاعدوا فلولا ذلك هلكت الارض ومن عليها

எல்லாக் காலங்களிலும் பூமியில் ஏழோ அல்லது அதற்கதிகமாகவோ அல்லாஹ்விற்கு வழிப்பட்ட நல்லடியார்கள் நிச்சயம் இருந்து கொண்டே இருப்பர். அவர்கள் இல்லையெனில் பூமியும் அதன் மீதுள்ளவையும் அழிந்து போய்விடும் எனக் கூறினார்கள் அறிவுப் பட்டணத்தின் தலைவாயிலான ஹழ்ரத் அலி (கர்ரமல்லாஹு வஜ்ஹஹு) அவர்கள்.

இந்த ஹதீதின் சனது இமாம் புகாரி, முஸ்லிமின் நிபந்தனைக்கேற்ப ஸஹீஹானதாகும். இந்த ஹதீது மர்ஃபூஃ உடைய சட்டத்திற்கும் உட்பட்டதாகும்.

2. அல்லாமா இப்னு முன்திர் அவர்கள் தனது தஃப்ஸீரில் அல்லாமா திப்ரி இமாம் அப்துர்ரஸ்ஸாக் ஆகியோர் அறிவித்த ஹதீதை இமாம் இப்னு ஜரீர் அவர்கள் தஃப்ஸீர் இப்னு ஜரீரில் ஷஹ்ர் இப்னு ஹௌஷப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறியதாக குறிப்பிட்டுள்ளார்கள்.

قال لم تبق الارض الا وفيها اربعة عشر يدفع الله بهم عن اهل الارض ويخرج بركتها الا زمن ابراهيم فانه كان وحده

இப்பூவுலகில் (எப்போதும்) இறைவனின் நல்லடியார்கள் பதினான்கு பேராவது இருந்து கொண்டேயிருப்பர். அவர்கள் இல்லையாயின் பூமியே இல்லாமலாகி விடும். அவர்கள் பொருட்டாலேயே தான் பூமியில் உள்ளோருக்கு இறங்கும் வேதனைகள் தட்டப்படுகின்றன. அவர்கள் பொருட்டாலேயே அருட்கள் இறங்குகின்றன. நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் காலத்தைத் தவிர; ஏனெனில் அவர்களது காலத்தில் அவர்கள் ஒருவரே போதுமானவராக இருந்தார்கள்.

3. இமாம் இப்னு முன்திர் அவர்கள் தமது தஃப்ஸீரில்

قلنا اهبطوا منها جميعا فاما يأتينّكم مني هدى فمن تبع هدى قال ما زال الله فى الارض اولياء منذ هبط آدم ما خلى الله الارض لابليس الاوفيها اولياءه يعملون لله بطاعته

"நீங்கள் யாவரும் சுவனபதியிலிருந்து இறங்குங்கள் என் பக்கமிருந்து உங்களுக்கு ஹிதாயத் வந்து யார் அதனை பின்பற்றுகிறாரோ என நாம் கூறியபோது" என்ற இறைமறை வசனத்திற்கு விளக்கமளிக்கையில் கீழ் வரும் ஹழரத் கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அளித்த விளக்கத்தையே கூறுகிறார்கள். ஹழ்ரத் ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்கள் இப்பூமிக்கு இறங்கியதிலிருந்து இப்பூமியில் அல்லாஹ்வின் நேசர்கள், வலிமார்கள் இருந்து கொண்டே இருக்கின்றனர். இப்பூமியை இப்லீஸுக்காக விட்டுவிடாது அல்லாஹ் தனது வலிமார்களையும், அவனை வழிப்பட்டு நல்லமல்கள் புரியும் நல்லடியார்களையுமே வைத்திருக்கின்றான்.

4. ஹாஃபிழுல் ஹதீத் அல்லாமா அபூ உமர் இப்னு அப்துல் பர்ரு ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் மாலிக் இப்னு அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்

கள் கூறியதாக இப்னுல் காஸிம் அறிவித்ததைக் குறிப் பிடுகிறார்கள்.

قال بلغني عن ابن عبّاس انّه قال لايزال الله فى الارض ولى مادام فيها للشيطان ولى

இந்த பூமியில் ஷைத்தானுக்கு (வலி) அதிகாரிகள் இருக்கும் காலமெல்லாம் அல்லாஹ்வின் வலிமார்களும் இருந்து கொண்டே இருப்பார்கள் என்பதாக ஸெய்யிதுல் முஃபஸ்ஸிரீன் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு கூறியதாக எனக்கு செய்தி கிடைத்தது என்கிறார்கள் இருலோகத் தலைவரின் பணிவிடையாளர் ஹழ்ரத் அனஸ் இப்னு மாலிக் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.

5. இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "கிதாபுஸ் ஸுஹ்த்" என்ற நூலிலும், அல்லாமா கிலால் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "கராமாத்துல் அவ்லியா" என்ற தனது நூலிலும், இமாம் புஹாரி ரஹ்மத்துல்லாஹி அலைஹி, இமாம் முஸ்லிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி இருவரின் நிபந்தனைப் பிரகாரம் ஸஹீஹான சனதுடன் குறிப்பிடுகிறார்கள்.

عن ابن عبّاس قال ماخلت الارض من بعد نوح من سبعة يدفع الله بهم عن اهل الارض

ஹழ்ரத் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களின் பின்னர் ஏழு நல்லடியார்கள் இப்புவியில் இல்லாதிருந்தது இல்லை. இவர்களின் பொருட்டாலேயே இப்புவியுடையோர் பாதுகாக்கப்படுகின்றனர் என்று ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினர்

கள். இந்த ஹதீதும் மர்ஃபூஃவுடைய சட்டத்தில் உள்ளதாகும்.

6. அல்லாமா அஸ்ரகீ அவர்கள் ''தாரிக் மக்கா'' என்ற நூலில் குறிப்பிடும் போது ஸுஹைர் இப்னு முஹம்மது ரலியல்லாஹு அன்ஹு அவர்களைத் தொட்டும் பதிவு செய்துள்ள ஹதீது.

عن زهير بن محمد قال لم يزل على وجه الارض سبعة مسلمون فصاعدا لولا ذالك لاهلكت الارض ومن عليها

இப்புவியில் ஏழு நல்லடியார்கள் (அல்லது அதற்கும் அதிகமானவர்கள்) நீங்காது இருந்தவர்களாகவே இருக்கின்றனர். அவர்கள் இல்லையெனில் இப்புவியும் அதிலுள்ளவையும் அழிந்துவிடும்.

7. ஹழ்ரத் ஜுன்தி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ''ஃபழாயிலு மக்கா'' என்ற நூலில் ஹழ்ரத் முஜாஹித் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நவின்றதை குறிப்பிடும் போது

عن مجاهد قال لم يزل على الارض سبعة مسلمون فصاعدا لولا ذالك هلكت الارض ومن عليها

இந்த பூமி ஏழு (அல்லது அதற்கு அதிகமான) நல்லடியார்களைக் கொண்டே நிலையாய் இருக்கின்றது. அவர்களில்லையாகில் இப்புவியும் அதிலுள்ள வஸ்துக்களும் நாசமாகிவிடும் என்றார்கள்.

8. ஹழ்ரத் இமாம் அஹ்மது இப்னு ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ''அஸ்ஸுஹ்த்'' என்ற நூலில் ஹழ்ரத் கஃப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதாக இயம்பிடும் போது

عن كعب قال لم يزل بعد نوح فى الارض اربعة عشر يدفع الله بهم العذاب

இப்பூமியில் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குப் பிறகு பதினான்கு நல்லடியார்கள் இருந்து கொண்டே வருகின்றனர். அவர்களின் பொருட்டாலேயே வேதனையும், சோதனையும் இறங்காதிருக்கிறது என்றார்கள்.

9. அல்லாமா கிலாப் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கராமாத்துல் அவ்லியா என்ற தனது நூலில் ஹழ்ரத் ஸாதான் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறியதைக் குறிப்பிடும் போது

عن زادان قال ماخلت الارض بعد نوح من اثنى عشر فصاعدا يدفع الله بهم اهل الارض

ஹழ்ரத் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குப் பின் இப்புவி பன்னிரண்டு பேர்களை கொண்டோ (அல்லது அதற்கும் அதிகமான) நபர்களைக் கொண்டே தான் நிலைபெறுகிறது. இவர்களின் பேருதவியாலேயே இவ்வையகத்தோர் பாதுகாக்கப்படுகின்றனர் என்றார்கள்.

10. இமாம் இப்னு முன்திர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தனது தஃப்ஸீரில்

ربّ اجعلني مقيم الصلوة من ذريتي ربّنا وتقبّل دعاء

“இறைவா என்னையும் என் வம்சாவழியினரையும், உன்னைத் தொழுவோர்களில் ஆக்கி விடுவாயாக” என்ற இறைவசனத்திற்கு ஸஹீஹான சனதுடன் இப்னு ஜரீர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் அறிவித்ததை

பின்வருமாறு குறிப்பிடுகிருர்கள்.

فلايزال من ذرّية ابراهيم على نبيّنا وعليه الصلاة والسّلام
ناس على الفترة يعبدون الله وانما وقع التقييد في هذه الاثار
الثلاثة بقوله من بعد نوح لانه من قبل نوح كان النّاس كلهم على الهدى

ஹழ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் பிச்சளத்தார் எம்பெருமானார் ﷺ அவர்கள் வரை ஃபத்ரத்துடைய காலத்திலும் இறைவனை வணங்கு வோராக இருந்துள்ளார்கள்.

மேற்கூறப்பட்ட மூன்று பொன்மொழிகள் "மிம் பஃதி நூஹ்" நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு பின்பு என மட்டிடப்பட்டதன் காரணம் ஹழ்ரத் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு முன்பாக எல் லோரும் நேர்வழியில் இருந்தவர்கள் என்பதே என்று குறிப்பிடுகின்ருர்கள்.

*11.* ஹழ்ரத் பஸ்ஸார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் முஸ்னத் பஸாரிலும், ஹழ்ரத் இப்னு ஜரீர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி, ஹழ்ரத் முன்திர் ரஹ்மத்துல் லாஹி அலைஹி, ஹழ்ரத் இப்னு அபீ ஹாதிம் ரஹ்மத்துல் லாஹி அலைஹி தத்தமது தஃப்ஸீர்களிலும் இமாம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "அல்முஸ்தத் ரக்கி"லும் ஸஹீஹான சனதுடன்,...

كان النّاس امّة واحدة (البقرة)

மனிதர்கள் யாவரும் ஒரே கூட்டமாகவே இருந்த னர் என்ற இறைவசனத்திற்கு ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் கூறிய விளக்கத்தை பதிவு செய்துள்ளதாவது,...

عن ابن عبّاس قال بين آدم ونوح عشرة قرونٍ كلّهم على شريعة من الحقّ فاختلفوا فبعث الله النبيّين

ஹழ்ரத் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும், ஹழ்ரத் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும் இடைப்பட்ட காலதூரம் 10 நூற்ருண்டு (1000 வருடங்)களாகும். இதில் வாழ்ந்தோர் யாவரும் சத்திய வழியிலேயே இருந்தனர். அதன்பின் மாறுபட்ட கொள்கையிலே வாழ ஆரம்பித்த போது அவர்களிடையே அல்லாஹ் நபிமார்களை அனுப்பினுன். ஹழ்ரத் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊது ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் இவ்வாறே குறிப்பிடுகிருர்கள்.

*12.* ஹழ்ரத் அபூயஃலா இமாம் தப்ரானீ, இமாம் இப்னு அபீஹாதிம் ஆகியோர் ஸஹீஹான சனதுடன்

كان النّاس امّة واحدة (البقرة)

என்ற மறை வசனத்திற்கு சகலரும் இஸ்லாத்திலேயே இருந்தனர் என்று ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் விளக்கமளித்ததை குறிப்பிட்டுள்ளார்கள்.

*13.* ஹழ்ரத் இப்னு அபீ ஹாதிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹியவர்கள் இவ்வசனத்திற்கு ஹழ்ரத் கதாதா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறிய விளக்கத்தை இயம்பிடும் போது,...

عن قتادة قال ذكرلنا انه كان بين آدم ونوح عشرة قرون كلّهم على الهدى على شريعة من الحقّ ثمّ اختلفوا بعد ذالك فبعث الله نوحا وكان اول رسول ارسله الله تعالى الى اهل الارض

ஹழ்ரத் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும், ஹழ்ரத் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும் இடைப்பட்ட காலம் 10 நூற்றாண்டுகளாகும். இக்காலத்தில் வாழ்ந்த சகலரும் நேர்வழியிலும், சத்திய மார்க்கத்திலுமே இருந்தனர். பின்னர் இவர்களில் சிலர் மாறுபட்ட கொள்கையில் இயங்க ஆரம்பித்த போது இப்புவிக்கு முதல் ரசூலாக நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களை அல்லாஹ் அனுப்பினான் என்று குறிப்பிடுகிறார்கள்.

ஹழ்ரத் அல்லாமா இப்னு ஸஃத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் தமது ''தபகாத் இப்னு ஸஃதில்''

عن ابن عبّاس قال ما بين نوح الى آدم من الآباء كانوا على الاسلام

இப்னு அப்பாஸ் ரலியல்லாஹுஅன்ஹு அவர்களை தொட்டும் அறிவித்ததாக கூறும் போது ஹழ்ரத் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும், ஹழ்ரத் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குமிடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த அவர்களது பெற்றோர் (பாட்டன்மார்) யாவரும் இஸ்லாமிலேயே இருந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹழ்ரத் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கும், நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களுக்குமிடைபட்ட இப்பத்து நூற்றாண்டு காலத்தில் வாழ்ந்தோர் யாவரும் இஸ்லாமிலேயே இருந்தனர் என்பதாக ஹழ்ரத் இக்ரிமா ரலியல்லாஹுஅன்ஹு அவர்கள் கூறியதை சுப்யான் இப்னு சயீத் அத்தௌரீ அவர்கள் தன் தந்தை வாயிலாக கேட்டதையும், ஹழ்ரத் இப்னு ஸஃத் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

அத்தன்ஸீல் எனும் நூலில், ஹழ்ரத் நபி நூஹ்

அலைஹிஸ்ஸலாமவர்கள், இறைவா! எனதும் எனது பெற்றோரினதும் மற்றும் என் வீட்டினுள் நுழைந்தோர் யாவரது பிழைகளையும் மன்னித்திடுவாயாக எனப் பிரார்த்தித்தார்கள். இக்கூற்றுக்கு விளக்கம் எழுதுகையில்

وولد نوح سام مؤمن بالاجماع والنّص لانه نجا مع ابيه فى السّفينة ولم ينج الامؤمن

ஹழ்ரத் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களின் புதல்வர் ஹழ்ரத் ஸாம் அவர்கள் ஏகோபித்த முடிவின் பிரகாரம் முஃமினாகவே இருந்ததினால் தான் தன் தந்தையுடன் கப்பலிலே ஈடேற்றம் பெற்றார். ஏனெனில் (அக் கப்பலின் மூலமாக) மூஃமின்கள் தவிர (வேறு யாரும்) ஈடேற்றம் பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

மேலும் இந்த நூலில்

وجعلنا ذرّية هم الباقين (الصّافات)

என்பதற்கு ஹழ்ரத் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களின் புதல்வர் நபியாகவும் இருந்ததாக வரலாற்று ஏடுகள் கூறுகிறதாகவும் குறிப்பிட்டுள்ளார்கள். இதனை இப்னு அப்துல் ஹிகம் அவர்கள் ''தாரீக் மிஸ்ர்'' என்ற வரலாற்று ஏட்டில் சொல்லியுள்ளார்கள்.

அல்லாமா இப்னு சஃத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ''தபகாத்''திலும், ஹழ்ரத் ஸுபைர் இப்னு பக்கார் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ''தாரீக் இப்னு அஸாகிர்''லும், ஹழ்ரத் நூஹ் நபி அலைஹிஸ் ஸலாமவர்களின் பேரரான (ஹழ்ரத் ஸாம் அவர்களின் மகன்) ஹழ்ரத் அர்பக்ஸத் அவர்கள் சந்தேகமின்றி இஸ்லாமிலேயே இருந்தார்கள் என்பதாக முஅய்யித் பி ரூஹி குத்ஸ் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு

அன்ஹு அவர்கள் கூறியதாக ஹழ்ரத் கல்பி ரஹ்மத்துல் லாஹி அலைஹி அவர்கள் ரிவாயத் செய்ததை குறிப் பிட்டுள்ளார்கள்.

இப்னு அப்துல் ஹிகம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "தாரீக் மிஸ்ர்" என்ற வரலாற்று ஏட்டில் ஹழ்ரத் அர்பக்ஷத் அவர்கள் தனது பாட்டனார் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களை சந்திக்கச் சென்றபோது நபியவர்கள் "யா அல்லாஹ்" இவரின் பிள்ளைகள் மத்தி யிலே நுபுவ்வத்தையும், அரசாட்சியையும் வழங்கு வாயாக எனத் தன் பேரருக்காகப் பிரார்த்தனை செய்தார்கள்.

ஹழ்ரத் அர்பக்ஷத் அவர்களின் பிள்ளைகள், பிள்ளை களின் பிள்ளைகள் இப்படியாக நபி இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்களின் அருமைத் தந்தை "தாரக்" அவர்கள் வரையான எல்லோரும் ஈமானுடையோ ராகவே இருந்தனர் என்பதாக வரலாற்றேடுகளில் தெளி வாக்கப்பட்டிருப்பதை பார்க்கலாம்.

அல்லாமா இப்னு ஸஃத் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் "அத்தபகாத்" என்ற நூலில் ஹழ்ரத் அபூ ஸாலிஹ் அவர்கள் கூறியதாக ஹழ்ரத் கலபி ரஹ்மத் துல்லாஹி அலைஹி அவர்கள் வழியாக கிடைக்கப் பெற்ற ஹதீதில்,...

عن ابن عبّاس انّ نوحا على نبيّنا وعليه الصّلاة والسّلام لما
هبط من السّفينة هبط الى قرية فبنى كلّ رجل منهم بيتا فسميت
سوق الثامنين فغرق بنو قابيل كلهم وما بين نوح الى آدم من الآباء
كانوا على الاسلام فلمّا ضاقت بهم سوق الثمانين تحولوا الى بابل
فبنوها فكثروا بها حتى بلغوا مأة الف وهم على الاسلام ولم

يزالوا على الاسلام وهم ببابل حتى ملكهم نمرود بن كوش بن كنعان بن حام بن نوح فدعاهم نمرود الى عبادة الاوثان ففعلوا عن مجاهد قال ليس آزر ابا ابراهيم

நபி நூஹ் அலைஹிஸ்ஸலாமவர்களும் (அவர்களோடு சென்றோரும்) கப்பலிலிருந்து இறங்கியபோது ஒரு சிற்றூரிலே இறங்கினார்கள். அவர்களில் ஒவ்வொருவரும் தத்தமக்கென வீடுகளைக் கட்டினர். பனூகாபில் கூட்டத்தினர் யாவரும் அந்த வெள்ளத்தில் மூழ்கடிக்கப்பட்டனர். ஆனால் நபி நூஹ் அலைஹிஸ்ஸலாம் நபி ஆதம் அலைஹிஸ்ஸலாம் இருவருக்குமிடைப்பட்ட காலத்தில் அவர்களது பெற்றோர்கள் யாவரும் இஸ்லாமில் தான் இருந்தனர்.

மக்கள் வளர்ச்சி அதிகரிக்க அதிகரிக்க, அவர்களால் உருவாக்கப்பட்டு பெயருமிடப்பட்ட கிராமத்தில் இட நெருக்கடி ஏற்பட்டது. இதனால் பாபில் என்ற நகருக்குச் சென்று வீடுகளைக்கட்டி குடியேறி இனப்பெருக்கம் செய்தனர். இதன் பலனாக மக்கள் தொகை அதிகரித்தது. இவர்கள் யாவரும் முஸ்லிம்களாகவே இருந்தனர்.

இத்தகைய வேளையில் தான் இவர்கள் யாவரும் முஸ்லிம்களாக பாபில் நகரிலே வாழ்ந்து கொண்டிருக்கும் போது நம்ரூத் பின் கௌஷ் பின் கன்ஆன் பின் ஹாம் பின் நூஹ் என்பவன் அரச பதவியில் அமர்ந்தான். அவன் மக்களை சிலையை வணங்கிட அழைத்தான். அவர்களும் அதனை ஏற்று வணங்கத் தலைப்பட்டனர் என்று ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ரிவாயத் செய்ததாக குறிப்பிட்டுள்ளார்கள்.

மேற்கூறப்பட்ட ஹதீதுகள் மற்றும் வரலாறுகள்

மூலமாக எம் நபிகள் கோமான் ﷺ அவர்களின் மூதாதையர்கள் யாவரும் ஆதம் நபி முதல் நம்ரூதின் காலம் வரை உண்மை முஃமின்களாகவே இருந்தார்கள் என்பது ஊர்ஜிதமாகிறது.

நம்ரூதுடைய காலத்திலே நபி இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்களும் அவர்களின் சிறிய தந்தை ஆஸரும் வாழ்ந்து வந்தனர். ஆஸர் நபி இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்களின் தந்தை எனக் கொண்டால் இவர்களின் வம்சா வழித்தொடரில் இவரை விதி விலக்களிக்க நேரிடும். ஆஸர் தந்தையல்ல. சிறிய தந்தை எனக் கொண்டால் இப்பிரச்சினை ஏற்படாது. இவ்வாறு ஆய்வாளர்களில் முன்னோர் குறிப்பிட்டுள்ளனர்.

ஹழ்ரத் இப்னு ஹாதிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் முயீஃபான சனதுடன்

واذ قال ابراهيم لابيه آزر (الانعام)

நபியே! நீங்கள் இப்ராஹீம் நபி தன் தந்தை ஆஸருக்கு கூறியதை நினைவு கூர்ந்து பாருங்கள் என்ற வசனத்திற்கு நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் தந்தை பெயர் ஆஸர் அல்ல. அவர் பெயர் தாரக் என்பதே என இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அளித்த விளக்கத்தை குறிப்பிடுகிறார்கள்.

واذ قال ابراهيم لابيه آزر (الانعام)

என்பதற்கு விளக்கமளிக்கையில் நபி இப்ராஹீம் அலை ஹிஸ்ஸலாமவர்களின் தந்தை பெயர் ஆஸர் என்பதே அல்ல. அவர் பெயர் இப்ராஹீம் இப்னு தாரக் இப்னு ஷாரிக் இப்னு நாகூர் இப்னு பாதிம் என்பதே என ஸஹீஹான சனதுடன் ஹழ்ரத் இப்னு ஜரீர் ரஹ்மத்துல்லாஹி அலைஹி கூறியதாக இப்னு முன்திர் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹழ்ரத் இப்னு ஹாதிம் அவர்கள் ஹழ்ரத் சுயூத் திடம் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தந்தை பெயர் ஆஸர் என்பதே என்று கூறியபோது இல்லை அவர் பெயர் தாரக் எனக்கூறி அரபு மொழி வழக்கப் பிரகாரம் ''அபுன்'' என்ற சொல் சிறிய தந்தைக்கும் உபயோகிப்பது பிரபல்யமானது. இவ்வுபயோகம் உண்மைக்கு மாறாக இருப்பினும் சரியே என்று கூறி ஞர்கள். இதன் சனத் ஸஹீஹானதாகும்.

மேலும் அத்தன்ஸீல் எனும் நூலில்,...

ام كنتم شهداء اذ حضر يعقوب الموت اذ قال لبنيه ما تعبدون من
بعدي قالوا نعبد الهك واله آبائك ابراهيم واسماعيل واسحاق

ஹழ்ரத் யஃகூப் நபி அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு மரணம் நெருங்கியபோது, அவர்களது புதல்வர்களை அழைத்து எனக்குப்பின் எதனை நீங்கள் வணங்குவீர்கள் எனக் கேட்டதற்கு நாங்கள் உங்களதும் உங்களது பெற்ரோர்களான இப்ராஹீம், இஸ்மாயில், இஸ்ஹாக் போன்ரோரின் இலாஹையே வணங்குவோம் என்றனர்.

நபி இஸ்மாயில் அலைஹிஸ்ஸலாமவர்கள் நபி யஃகூப் அலைஹிஸ்ஸலாமவர்களுக்கு சிறிய தந்தை தான். ஆனல் அவர்கள் உபயோகித்த சொல் ''அபுன்'' தந்தை என்று அல்லாஹ் கூறுகிருன். இதுபோல் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் நபி யஃகூப் அலைஹிஸ்ஸலாமவர்களது பாட்டனுராக இருந்தும் தந்தை என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டுள்ளதை காணலாம்.

''ஜத்துன்'' பாட்டனையும் தந்தை ''அபுன்'' எனக் கூறலாம் என்ற ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் சொல்லையும், ''அம்முன்'' சிறிய

தந்தை சாச்சா என்பவரையும் தந்தை ''அபுன்'' எனக் கூறலாம் என்ற ஹழ்ரத் அபுல் ஆலியா ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கூற்றையும் ஹழ்ரத் இப்னு அபீஹாதிம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

இதே ஆயத்தை ஆதாரமாகக் கொண்டு தாய்மாம னும் தந்தையே. சிறிய தந்தையும் தந்தையே என்று முஹம்மது இப்னு கஃபுல் குர்ழீ அவர்கள் கூறியுள் ளார்கள்.



# ஆஸருக்காக மன்னிப்புக் கோருவதை விட்டு விடல்

இந்த விடயத்தில் கூறப்படுகின்ற கருத்துக்கள் யாவும் புனித நபிமணித் தோழர்கள், தாபிஈன்கள் போன்ரோரைச் சார்ந்ததாகும். இதுதவிர சுலேமான் பின் ஸுர்த் அவர்கள் கூறியதாக ஸஹீஹான சனதுடன் ஹஜ்ரத் இப்னு முன்திர் அவர்கள் தனது தப்ஸீரில் ரிவாயத் செய்த ஹதீதின் மூலமாக ஆஸர் என்பவர் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களின் சிறிய தந்தை என்பது தெளிவாகிறது. அதாவது:-

عن سليمان بن صرد قال لما أرادوا ان يلقوا ابراهيم فى النّار جعلوا يجمعون الحطب حتى ان كانت العجوز لتجمع الحطب فلما أرادوا ان يّلقوه فى النّار قال . . . حسبي الله ونعم الوكيل . . . فلما القوه قال الله . . . يانار كوني بردا وسلاما على ابراهيم. فقال عمّ ابراهيم . . . من اجلي دفع عنه فارسل الله شرارة من النّار فوقعت على قدمه فاحترقته

நம்ரூதும் அவனது சஹாக்களும் ஹழ்ரத் இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்களை நெருப்பிலிட்டு எரித்திட எண்ணம் கொண்டு விறகுகளைச் சேகரிக்க ஆரம்பித்தனர். ஒரு வயோதிகப் பெண் ஒருத்தியும் அவர்களுக்கு விறகு சேகரிக்கும் விடயத்தில் உறுதுணையாக இருந்தாள்.

இறுதியில் நபியவர்களை அந்நெருப்புக் கிடங்கினுள் எறிய எத்தனிக்கையில் ஹழ்ரத் இப்ராஹீம் நபி

அவர்கள் ''ஹஸ்பியல்லாஹு வனிஃமல் வகீல்'' என கூறிய நிலையில் வீசப்பட்டார்கள். அப்போது அல் லாஹ் ஜல்ல ஜலாலுஹு ''யா நாருகூனி பர்தன் வசலாமன் அலா இப்ராஹீம்'' இப்ராஹீம் மீது குளிராக வும், சாந்தியாகவும் மாறிவிடு என நெருப்புக்கு கட்டளையிட்டான்.

நபி இப்ராஹீம் அவர்களை நெருப்பிலே தள்ளப் பட்டதைக் கண்ணுற்ற அவர்களின் சிறிய தந்தை ''ஆஸர்'' தன்னை தூரப்படுத்துமாறு கூறினர். மறு கணமே அல்லாஹ் அந்நெருப்பிலிருந்து சிறு பொரியை அவர் காலில் விழச்செய்தான். அப்பொரி அவரையே எரித்துச் சாம்பலாக்கியது. இதன்மூலமாக எமக்குப் புலனுகும் ஒரு விடயம் யாதெனில், ஆஸர் என்பவர் நபியவர்கள் நெருப்புக் கிடங்கினுள் எறியப்பட்ட கால எல்லையில் மரித்து விட்டார். மேலும் அல்லாஹ் திரு மறையில் ஆஸர் தன் விரோதிகளில் ஒருவர் என்பதை அறிவித்ததும் அக்கணமே அவருக்காக பாவமன்னிப் புக் கோருவதை விட்டு விட்டார்கள்.

மேலும் நபியவர்களுக்கு ஆஸர் ஷிர்க்கில் மரித்தார் எனத் தெரிந்த பின் அவருக்காக மன்னிப்புக் கோரு வதை விட்டு விட்டார்கள் என்பதற்கு ஹதீஸ்கள், வரலாறுகள் சான்ருயிருக்கின்றன.

ஹழ்ரத் இப்னு அபீ ஹாதிம் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் ஸஹீஹான சனதுடன் ஹழ்ரத் இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிப்புச் செய்த ஒன்ருவது..

ஹழ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தனது சிறிய தந்தைக்காக அவர் மரிக்கும் வரை இறைவ னிடம் மன்னிப்புக் கோரி வந்தார்கள். அவர் மரித்ததும்

நபியவர்களுக்கு அல்லாஹ்வின் விரோதி என்பது தெரிய வந்ததும் மன்னிப்புக் கோருவதை விட்டு விட்டார்கள்.

## நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தம் பெற்றோருக்காக மன்னிப்பு வேண்டல்

இப்னு அபீ ஹாதிம் அவர்கள் மற்றுமொரு இடத்தில் முஹம்மத் பின் கஃபப், கதாதா, முஜாஹித், ஹஸன் போன்றோர்கள் ரிவாயத் செய்ததைக் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது,

كان يرجوه في حياته فلما مات على شركة تبرء ابراهيم
منه ثم هاجر ابراهيم عقيب واقعة النار الى الشام كما نص الله على
ذالك فى القرآن ثم بعد مدة من مهاجره دخل مصر واتفق له فيها
مع الجبار ما اتفق بسبب سارة واخدمه هاجر ثم رجع
الى الشام ثم امره الله بنقلها وولدها اسماعيل الى مكة فنقلهما

நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் "ஆஸர்" தனது உலக வாழ்க்கையில் இஸ்லாமியராக மாறிவிடுவார் என பேராவல் கொண்டவராயிருந்தார்கள். அவர் ஷிர்க்கிலே தான் மரித்தார் என்று அறிந்ததும் அவர் விடயத்திலிருந்து நீங்கிக் கொண்டார்கள்.

பின்னர் நபியவர்கள் இந்நெருப்பு நிகழ்ச்சிக்குப் பின்னர் இறைவனின் கட்டளைப் பிரகாரம் ஷாம் தேசத்திற்கு பயணமானார்கள். இதுபற்றி குர்ஆன் வாக்கியங்களைக் காணலாம். சிலகாலம் ஷாமில் தரித்துவிட்டு மிஸ்ருக்கு பயணமானார்கள். ஹழ்ரத் ஸாரா அலைஹஸ்ஸலாமவர்களுக்காக அந்நாட்டு கொடுங்கோல் அரசனை சந்திக்க வேண்டியதாயிற்று. அந்த அரசன் ஹழ்ரத் ஸாரா அலைஹஸ்ஸலாமவர்கட்கு பணிவிடை

புரிவதற்கு ஹழ்ரத் ஹாஜரா அலைஹஸ்ஸலாமவர்களை நியமித்தான். பின்பு அங்கிருந்து ஷாம் தேசத்திற்கு மீண்டும் திரும்பினார்கள். ஹழ்ரத் ஹாஜரா அலைஹஸ் ஸலாமவர்களையும், அவர்கள் புதல்வர் இஸ்மாயீல் அலைஹிஸ்ஸலாம் அவர்களையும் மக்காவிற்கு கொண்டு செல்லுமாறு இறை கட்டளை கிடைத்ததும் இருவரையும் மக்காவிற்கு கொண்டு சென்று பின்வருமாறு பிரார்த் தித்தார்கள்.

رَبَّنَا اني اسكنت من ذريتي بواد غيرذي زرع الى قوله

رَبَّنَا اغفرلي ولوالدي وللمؤمنين يوم يقوم الحساب

**துஆவின் பொருள் :**

எங்கள் இறைவா! எனது குடும்பத்தில் சிலரை பாலைவனத்தில் விட்டிருக்கிறேன். மேலும் உனது புனிதமிகு வீட்டின் பக்கம் நிலை நிறுத்துகின்றேன். எனவே இவர்கள் தொழுகையை நிலை நிறுத்தட்டும். ஆகவே நீ இவர்கள் மீது அன்பு காட்டுவோராக சில ரைத் திருப்பி விடுவாயாக. மேலும் புசிக்க கனி வகை களை இவர்களுக்கு வழங்குவாயாக. இவர்கள் உனது அருட்கொடைகளை அறிந்து உனக்கு நன்றி செலுத்து வோரில் உள்ளடங்கிடுவர்.

எங்கள் ரட்சகனே! நீ எங்களின் எல்லாக் காரியங் களையும் நன்கறிந்தவன். நாங்கள் மறைமுகமாக்கு கின்றவைகளையும், வெளிப்படுத்துபவைகளையும் நீ அறிபவன். வானம் பூமியிலுள்ள எதுவும் அல்லாஹ் விற்கு மறைந்ததல்ல. எல்லாப் புகழும் அல்லாஹ் வுக்கே. எவன் (எனது) வயோதிகத்தில் இஸ்மாயீல், இஸ்ஹாக் இருவரையும் வழங்கினானோ சந்தேகமின்றி அவன் என் பிரார்த்தனையை செவிமடுக்கின்றான். என் நாயனே! என் குழந்தைகளில் சிலரையும் தொழு

கையை நிலைநாட்டுவோராக்கு. எங்கள் இறைவனே! எமது வேண்டுகோளை ஏற்றுக்கொள். எங்கள் இறைவனே! என்னையும், என் தாய் தந்தையரையும், முஃமின்களையும் கேள்வி கணக்கு கேட்கும் நாளில் காப்பாற்றுவாயாக.

ஆக ஹழ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் தனது சிறிய தந்தை ஆஸர் மரணித்து நீண்ட நாட்களுக்குப் பின் தனது பெற்றோர்களுக்காக பாவ மன்னிப்புக் கோரியிருக்கின்றார்கள்.

எனவே குர்ஆனிலே காபிராக இருந்ததாகவும், அவருக்காக பாவமன்னிப்புக் கோருவதில் நின்றும் நீங்கி விட்டார் என்பதாகவும் கூறப்பட்டதெல்லாம் அவர்களின் உண்மையான தந்தையையல்ல. சிறிய தந்தையை என்பது திண்ணம்.

**மக்கா வருகை**

عن الكلبي رضي الله عنه قال هاجر ابراهيم من بابل
الى الشام وهو يومئذ ابن سبع وثلاثين فأتي حران فاقام بها زمانا ثمّ رجع
الى الشام فنزل السّبع هي ارض بين ايلياء وفلسطين ثم ان بعض
اهل البلد آذوه فتحول من عندهم فنزل منزلا بين الرملة وايلياء

அல்லாமா இப்னு சஃத் அவர்கள் "தபகாத்" எனும் நூலில் ஹழ்ரத் கலபீ கூறியதாக அறிவிப்புச் செய்வதாவது. ஹழ்ரத் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாமவர்கள் பாபிலில் இருந்து ஷாம் நாட்டிற்கு ஹிஜ்ரத் சென்றபோது அவர்கள் 37 வயதை உடையவராயிருந்தார்கள். ஹிரான் என்னுமிடத்திற்கு வந்து அங்கு சொற்ப காலம் தரித்த பின் (உர்தூன்) ஜோர்தான் வந்து அங்கும் சில